Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



'எரிக் கனேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கனேஷ்' (சு-1802)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 18 (13.12.2003) சனிக்கிழமை இதழ்:74

# வவுனியாவில் மூன்று சகோதரர் படுகொலை; குற்றவாளியான சிப்பாய்க்கு மரணதண்டனை!



விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் சிப்பாய்.

## நீதிபதி விஸ்வநாதன் நேற்றுத் தீர்ப்பு

(வவுனியா)

**1996 ஆம் ஆண்டு வவுனியா - சாளம்பைக்குளத்தில் மூன்று சகோதரர்களைப் படுகொலைசெய்த குற்றத்துக்காக இராணுவச் சிப்பாயான ஜே.ஏ.பி.பிரேமசிறிக்கு மூன்று மரணதண்டனைகளை விதித்து - வவுனியா நீதிபதி ஜே.விஸ்வநாதன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.**

வவுனியா சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த க.கனகலிங்கம், க.புலேந்திரராசா, க.கனகேந்திரன் ஆகிய மூன்று சகோதரர்களின் கொலை தொடர்பாகவே நீதிபதியினால் முதலாம் எதிரியான இராணுவச்சிப்பாய்க்கு மரண தண்டணை விதிக்கப்பட்டது.

விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் இவர்களது வீட்டுக்கு, மரணதண்டணை விதிக்கப்பட்ட சிப்பாயும் மேலும் இருவரும் வழமையாக மரக்கறி வாங்கச் செல்வதாகவும் ஆனால், 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதி இரவு முகமூடி அணிந்த ஒருவரும், இரு படையினரும் இவர்களது வீட்டிற்கு சென்றுள்ளனர். அங்கு மூன்று சகோதரர்களையும் (10 ஆம் பக்கம் பார்க்க)



மரணதண்டனையின் பின் அழுதபடி வருகிறார்.

## பல்கலைக்கழக அனுமதிக்கு ஒரு தடவை மட்டுமே விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதல் பல்கலைக்கழக அனுமதிக்கு முதன்முறை பதிவுசெய்தவர்கள் மீண்டும் பரீட்சை பெறுபேறுகள் கிடைத்த பின் பதிவுசெய்து பல்கலைக்கழகத்துக்கு நுழைய முடியாது என மூன்றாம் நிலைக் கல்வியமைச்சரான கபிர் காசிம் தெரிவித்தார்.

2003 ஆம், 2004 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக இசற் ஸ்கோர் பற்றிய ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் நடைபெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார். பல்கலைக்கழக அனுமதிக்காக பதிவுசெய்யும் ஒருவர் மீண்டும் பதிவுசெய்யும் அனுமதி அடுத்த ஆண்டுமுதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பாக கடந்த அண்டு மேற்கொள்ளப்பட்ட தெரிவுபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக நிலவிய குறைபாடு காரணமாக இவ்வாண்டு நடைமுறைப்படுத்த முடியவில்லை என சுட்டிக்காட்டினார். ஒரு கோரிக்கைக்கு இணங்கவே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் எனவும் தெரிவித்தார். (01)

### அரசு -புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு

## பாதுகாப்பு அமைச்சு அவசியமானால் அதனை வழங்கத் தயாராக உள்ளோம்!

### செய்தியாளர் மாநாட்டில் சரத் அமுனுகம

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கு பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள அதிகாரம் அவசியமானால் அதனை வழங்குவதற்கு ஜனாதிபதி தயங்கமாட்டார்.

இவ்வாறு பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்திடமிருந்த மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கான களப் பயணம்; பத்திரிகையாளர் குழு யாழ். வருகை!

(யாழ்ப்பாணம்)

இனநல்லுறவை அடிப்படையாகக் கொண்ட வடக்கிற்கான "களப் பயணம்"என்ற நோக்குடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளாகள் எதிர்வரும் 17 ஆம் திகதி சுமார் 40 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கிழக்கு மாகாண செய்தியாளர் சங்கத் தலைவர் இரா. துரைரத்தினம் தலைமையில் யாழ். குடாநாட்டுக்கு வருகின்றனர்.

இங்கு வரும் இவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் சென்று அங்குள்ளவர்களுடன் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவுள்ளனர்.

இதன்பின்னர் வன்னி செல்லும் இவர்கள், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனையும் சந்திக்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (07)

## சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டணி விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்!

### பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் தெரிவிப்பு

## விண்ணாணம் விநாசியர்



வில்லை என சுட்டிககாட்டினார். ஒரு கோரிக் கைக்கு இணங்கவே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் எனவும் தெரிவித்தார். (01)

## விண்ணாணம் விநாசியர்



பாதுகாப்பு அமைச்சு அவசியம் எண்டு தெரிஞ்சுதானே அம்மா பறிச்சவா..!

## விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்!

### பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக் கும் இடையில் கூட்டணி அமைப்பதற்கான ஒப் பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவிததார்.

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடை யில் கூட்டணி அமைப்பது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இரு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி அமைப் பது தொடர்பாக பல சுற்றுப் பேச்சுக்கள் நடை பெற்றன. இந்தப் பேச்சுக்கள் தற்போது முடி வடைந்துள்ளது.

கூட்டணி தொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச் சாத்திடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை இரு கட்சி களும் மேற்கொண்டுவருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகள் கூட்டணி அமைப் பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. லங்க சமசமா ஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணக்கம் தெரிவிப்பதற்கு காலவகாசம் கேட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (01)

## முஸ்லிம்களின் ஹர்த்தால் நேற்று பிசுபிசுத்துப்போனது!

(திருகோணமலை)

திருகோணமலை - கிண்ணியாப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டித்து "முஸ் லிம் இளைஞர்எழுச்சிப் பேரவை மன்றம் - வடக்கு கிழக்கு மாகாணம்" என்ற அமைப்பி னால் கிழக்கு மாகாணத்தில் நேற்று அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தால் வெற்றிபெறவில்லை.

இந்த மாகாணங்களில் அரச அலுவலங் கள், வர்த்தக நிலையங்கள் என்பன வழமை யாக இயங்கியதுடன் போக்குவரத்தும் வழமை யாக நடைபெற்றுள்ளது.

அம்பாறையில் அக்கரைப்பற்று தவிர்ந்த ஏனைய முஸ்லிம் பிரதேசங்கள் கூட வழமையான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தன. (07)

## புலிகளின் திட்டவரைபு குறித்து ஜனாதிபதி - பிரதமர் ஆராய்வு!

### அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சின்போது விடு தலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் திட்டவரைபு யோசனைகளும் ஆராயப்பட்டதாக இரு தலைவர்களுக்கும் நெருங்கிய வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தினை இரு தலைவர்களும் சேர்ந்து கலந்துரையாடியது இதுவே முதல் தடவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் பிரதமரால் உருவாக்கப்பட்ட மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவல குழு எதிர்வரும் 15 ஆம் திகதி சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.






## நயினாதீவு கடற்பரப்பில் 8 இந்திய மீனவர் கைது!

(நயினாதீவு)

நயினாதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த 14 இந்திய மீனவர் களை கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

இரண்டு படகுகளில் அத்துமீறி மீன் பிடித் துக்கொண்டிருந்த எட்டு மீனவர்களையும் படகோட்டிகள் இருவரையும் கைதுசெய்த கடற் படையினர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

எஞ்சிய ஆறு மீனவர்களும் இரண்டு படகு களும் கடற்படையினரால் பாதுகாப்பில் வைக கப்பட்டுள்ளது. இது குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கச்சதீவு கடற்பரப்பில் 25 இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி மீன்பிடித்ததை கடற்படையினர் அவதானித்ததாகவும் கூறப்படுகிறது.


EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு!

இளம் வாலிபர் கிறிஸ்தவச் சங்கத்தின் ஏற்பாட்டில் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு இன்றுகாலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் 108 பேர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். முதியவர்களுக்கு மதியபோசனமும், நினைவுப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இத்தகைய நிகழ்வுகளை நடத்துவதற்கு இளம் வாலிபர் கிறிஸ்தவ சங்கம் முக்கியத்துவம் வழங்கிவருவதுடன், முன்னோடியாகவும் செயற்பட்டு வருவதாகவும், கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச மனித உரிமைகள் தினத்தைமுன்னிட்டு இளைஞர்கள், யுவதிகளுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றதாகவும் சங்கத்தின் நிகழ்ச்சித் திட்டமிடல் செயலாளர் ரி.சி.பிறவுண்சன் தெரிவித்தார். (ப)

## நேர்முகத்தேர்வு

வருவாய்பகுதியால் 2003-12-11 ஆம் நாள் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்விற்கு வருகை தராதவர்கள் கீழ்வரும் கால ஒழுங்கில் நேர்முகத் தேர்வு நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

**காலம்** :- 2003-12-18
**நேரம்** :- காலை 9.00 மணி
**இடம்** :- வருவாய்ப்பகுதி செயலகம், யாழ்சாலை, பளை.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(551)

## திருத்தம்

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் இந்த மாதம் 31 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நடைபெறுமென வெளியான செய்தியும், மோட்டார் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தோருக்கான எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும் என வெளியான செய்தியும் தவறானது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

## முதியோரின் சடலம் மீட்பு

(காரைநகர்)

கோவில் தொண்டு செய்த முதியவர், கோவில் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காரைநகர் புது வீதிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மு.பொன்னம்பலம் (வயது 58) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (121)

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித் மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
GET GARTER
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

## பெயர்மாற்றம்

**சின்னப்பொடியன் கதிரவேலு** என்பவருக்கும் **ஆழ்வான் சின்னப்பிள்ளை** (கன்னிப்பெயர்) என்பவருக்கும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் 14.05.1984 திங்கட்கிழமை பிறந்த கதிரவேலு பேரழகன் ஆகிய நான் இன்று (13.12.2003) முதல் எனது பெயரை

**கதிரவேலு அன்பழகன்**

என மாற்றியுள்ளேன். என்பதை இத்தால் இலங்கை அரசினர்க்கும் சகல பொதுமக்களுக்கும் பகிரங்கமாக அறியத்தருகிறேன்.

*கன்பொல்லை வீதி*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.* (சி-1883)

**க.அன்பழகன்.**

# வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## மீள் கேள்வி அறிவித்தல் - 2004

01.01.2004 ஆந் திகதி முதல் 31.12.2004 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

- கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி - 18.12.2003 வியாழன் 14.00 மணி (2.00 மணிவரை)
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 19.12.2003 வெள்ளி 12.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி - 19.12.2003 வெள்ளி 14.00 மணி (2.00 மணிக்கு)

### அட்டவணை

| குத்தகையின் விபரங்கள் | மாதவாடகை | கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டினம்** | | | | |
| 1. மானிப்பாய் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 2000/- | 361,800/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை (சந்தை) | 400/- | 300/- | 2000/- | 230,175/- |
| **மானிப்பாய் கிராமம்** | | | | |
| 1. காக்கைதீவு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 9,900/- |
| 2. நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 67,545/- |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 45,045/- |
| 4. நவாலி பிரசாத் சந்தை, மாட்டிறைச்சிக்கடை | 400/- | 300/- | 1500/- | 81,890/- |
| 5. நவாலி பிரசாத் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 300/- | 1500/- | 27,000/- |
| 6. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | - | 300/- | 2000/- | 180,270/- |
| 7. சண்டிலிப்பாய் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 22,500/- |
| **பண்டத்தரிப்பு பட்டினம்** | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 13, 500/- |
| 2. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை, கருவாட்டுக்கடை இல. 01 | 250/- | 300/- | 1500/- | 6, 300/- |
| 3. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை, கருவாட்டுக்கடை இல. 02 | 250/- | 300/- | 1500/- | 6,300/- |
| **பண்டத்தரிப்பு கிராமம்** | | | | |
| 1. மாசியப்பிட்டி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 70, 200/- |
| 2. இளவாலை பொதுச் சந்தை | - | 300/- | 1500/- | 52, 290/- |
| 3. மாசியப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 5, 000/- |
| 4. மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 30, 500/- |
| 5. மாதகல் சந்தை - மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 10, 000/- |
| 6. மாதகல் சந்தை - ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 5, 000/- |
| 7. பெரியவிளான் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 5, 000/- |

மேலதிக விபரங்களை மானிப்பாய் பட்டின/ கிராம உப அலுவலகங்களிலும் மற்றும் பண்டத்தரிப்பு பட்டின/ கிராம உப அலுவலகங்களிலும் தலைமைச் செயலகத்திலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வலி.தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம்,
மானிப்பாய், 12.12.2003

(சி-1885)

பிரான்சிஸ் விக்டர்,
செயலாளர்,

## பாதுகாப்பு அமைச்சு

# ஜனாதிபதியிடமே இருக்கவேண்டுமென அரசியலமைப்பில் கூறப்படவில்லை

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியிடம்தான் பாதுகாப்பு அமைச்சு இருக்கவேண்டுமென, அரசியல் அமைப்பில் எந்த இடத்திலும் வலியுறுத்தப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே, அமைச்சர் பீரிஸ் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி கூறுவதுபோல மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பில், பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம்தான் இருக்கவேண்டும் என்று அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கவில்லை என்றும், அவர் அங்கு கூறினார். பாதுகாப்பு அமைச்சை - ஜனாதிபதி அமைச்சரவை உறுப்பினர் ஒருவரிடம் கையளிக்கமுடியாது என, உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எங்குமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட பீரிஸ், தீர்ப்பின் எந்தவொரு இடத்திலும் அத்தகைய கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு விடயத்தில், மேலாதிக்கம் செலுத்தும் அதிகாரம் இருக்கிறது என்றுதான் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறதேதவிர, அந்த அமைச்சை ஜனாதிபதி தன்வசமே வைத்திருக்கவேண்டும் என்று எந்தவொரு இடத்திலும் தெரிவிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இல்லாதநிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது சாத்தியமில்லை என்றும் பேராசிரியர் பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு இல்லாமல், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதில் அர்த்தமில்லை எனக் கூறிய அவர், அவ்வாறு செய்வது ஒரு ஏமாற்று வேலையாகவே இருக்கும் என வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தெரிவித்திருப்பதுபோல, பாதுகாப்புக்கு உதவும் ஒரு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலும் பயனேதும் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், பாதுகாப்புக்கு உதவும் அமைச்சரிடம் எந்தவொரு தீர்மானிக்கும் அதிகாரமும் இருக்கப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாதுகாப்பு அமைச்சு தொடர்பான புதிய யோசனை பிரதமரிடம்!

ஜனாதிபதி சந்திரிகா - பாதுகாப்பு படைத்துறை அமைச்சுத் தொடர்பான புதிய யோசனை ஒன்றை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

தேசிய பாதுகாப்பு அமைச்சு என்ற பெயரில், புதிய அமைச்சு ஒன்றை உருவாக்கி அதனை, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் கையளிப்பது என்பதாகவே ஜனாதிபதியின் யோசனை அமைந்துள்ளது.

இதேபோன்றதொரு அமைச்சு - ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்திலும் உருவாக்கப்பட்டு, அந்த அமைச்சுக்குப் பொறுப்பானவராக, லலித் அத்துலத்முதலி நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆனாலும், லலித் அத்துலத்முதலியின் பொறுப்பின்கீழ், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மட்டுமே விடப்பட்டிருந்ததுடன், பொலிஸ்பிரிவு மற்றும் ஆயுதப் படையினர்மீதான கட்டுப்பாடு, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழேயே இருந்துவந்தது.

தற்போது ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைகளில், நோர்வேயின் பங்கு மற்றும் கண்காணிப்புக்குழு தொடர்பான விவகாரங்கள் உள்ளிட்ட, சமாதான முயற்சிகளோடு தொடர்பான விடயங்கள் மட்டுமே தேசிய படைத்துறை அமைச்சின் அதிகாரத்தின்கீழ் விடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், பாதுகாப்பு தொடர்பான ஏனைய விவகாரங்களை, தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே ஜனாதிபதியின் திட்டமாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையை ஏற்கமறுத்ததையடுத்தே, நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் எதிர்பார்க்கப்பட்டளவு முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் அதிகாரி உடுகம்பொலவின்

# தனிப்பட்ட முடிவின் அடிப்படையில் அத்துருகிரியவில் தேடுதல் நடத்தப்பட்டது

### ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கை, பிரதிப் பொலிஸ்மா அதிபரான குலசிறி உடுகம்பொலவின் தனிப்பட்ட முடிவின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டதாக, இந்தச் சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரியவில் இராணுவ விசேட படைப் பிரிவினரின் ஆயுதக் களஞ்சியம் மற்றும் மறைவிட இருப்பு தொடர்பான தகவல்களை இராணுவ அதிகாரிகளான ஏ.டி திஸநாயக்க, கேணல் பத்மகிரி உடுகம்பொல ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்துக்கு - 2001 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் தெரியப்படுத்தி இருப்பதாக இந்த விசாரணை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலின் அடிப்படையிலேயே கேணல் பத்மசிறி உடுகம்பொலவின் சகோதரரான பிரதிப்பொலிஸ்மா அதிபர் குலகிரி உடுகம்பொல அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுத மறைவிடத்தில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டார்.

குறித்த மறைவிடத்தில் தேடுதல் நடத்த வேண்டியது குறித்து 2001 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் இராணுவத் தளபதியிடம் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பயணம் செய்த வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்தே, ஆயுத மறைவிடம் மீது தேடுதல் நடத்தப்பட்டதாகவும், பொலிஸாரின் இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமானது என ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இனிவரும் தேர்தல்களில்

# வேட்பாளர்களைப் பொறுத்தே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்போது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தகமையும், திறமையினையும் நன்கு ஆராய்ந்த பின்னரே தீர்மானிக்கப்படும் என்று, அமைச்சர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்கள் ஒரே கட்சியின் கீழ் எதிர்காலத்தில் செயற்படுவது அவசியம் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

தனது அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமல்லாது அரசாங்கத்துக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் கருத்து பேதம் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு

# தனி நிர்வாக அலகு வழங்குவதாயின் முஸ்லிம்களுக்கும் வழங்கவேண்டும்

### சேகு இஸ்ஸதீன் கூறுகிறார்

கிழக்கு மாகாண தமிழர்களுக்கு தனியான நிர்வாகப் பிரிவு வழங்கப்படுமாக இருந்தால், அங்கு முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர் வாகப் பிரிவு வழங்கப்படவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் சேகு இஸதீன்.

துறைமுகம் மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டால்தான் இலங்கை இனப் பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வினை காண முடியும் என்றும், ஒரு பிரிவினருக்கு கூடிய அதிகாரங்களை வழங்கிவிட்டு மற்றைய பிரிவினருக்கு குறைந்தளவில் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது மீண்டும் பிரச்சினைகளையே உண்டு பண்ணும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கருத்துத் தெரி விக்கையில் முஸ்லிம்களை ஓரம்கட்டி பிரச்சி னைக்கு தீர்வு கண்டுவிடமுடியாது. என்பது ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும் என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் திருகோணமலையில் உள்ள துறைமுகங்களுக்கு ஆட்களை வேலைக் கமர்த்துகின்றபோது, அப்பகுதி இளைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலமாக இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அவர் தெரிவித்தார்.

### பொதுநலவாய அமைச்சர் குழுவில் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும்!

பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களின் நடவடிக்கை குழுவில், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நைஜீரிய தலைநகரான அபுகாவிலில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பு தலைவர்களின் கூட்டத்தின்போது, இதற்கான அங்கீகாரம் ஏகமனதாக வழங்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளில் 8 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்தக் குழுவில் கனடா, இந்தியா, மோல்டா, பஹமஸ், தான்சானியா உள்ளிட்ட 8 நாடுகளைச் சேர்ந்தவர்களும் இடம்பெறுகின்றனர்.

# தேசிய அரசை அமைப்பதற்கு ஐ.தே.முன்னணி தயாரில்லை

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து, தேசிய அரசை அமைப்பது தொடர்பாக, தான் முன்வைத்த யோசனைகளுக்கு, அந்தக் கட்சி இணக்கம் தெரிவிக்கவில்லையென - ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

சமாதான் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக, தான் முன்வைத்த யோசனைகளுக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

நாம் ஒன்றாக இணைந்து சிறிது காலம் அரசாங்கம் ஒன்றை அமைப்போம். பின்னர் தேர்தல் ஒன்றின்போது விலகிவிடுவோம் என்று சொன்னேன். தமது அதிகாரம் குறையுமென்ற காரணத்தால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு இதில் விருப்பமில்லை. அப்படியென்றால், சமாதான செயற்பாடுகளுக்கு நாம் ஒத்துழைப்பு தருகின்றோம். எமக்கு எதுவும் வேண்டாம். தேசிய அரசாங்கம் அமைக்க அமைச்சுக்களோ வேறு எவையும் தேவையில்லை. சமாதான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு தருகின்றோம் என யோசனை தெரிவித்தோம். அதற்கும் சம்மதம் தெரிவிக்கவில்லை.

ஆனால், தாம் மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றமையினால் சமாதான முயற்சிகளில் தாமதம் ஏற்படவில்லையென அவர் சுட்டிக் காட்டினார்.

இருப்பினும், சமாதானப்பேச்சுக்களைத் தொடர முடியவில்லையென பிரதமர் தற்போது கூறியுள்ளார். அவர் தாம் நினைப்பது போல நடக்கவே விரும்புகின்றார். நாட்டைப் பற்றி பிரதமர் நினைப்பதில்லை.

அத்துடன், பாதுாப்பு அமைச்சை மீண்டும் அரசாங்கத்திடம் கையளிக்கப் போவதில்லையெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# இந்தியாவின் ஆறு நகரங்களிலிருந்து கொழும்புக்கு தினசரி விமானசேவை

### இந்திய அரசு அங்கீகாரம்

சென்னை உள்ளிட்ட இந்தியாவின் ஆறு முக்கிய நகரங்களிலிருந்து, கொழும்புக்கு தினசரி விமானசேவையைத் தொடங்க - இந்திய மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

டெல்கியில் நேற்றுமுன்தினமிரவு, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது விமானத் துறை தொடர்பான பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அது குறித்து இந்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் பிரதாப் சிங்ரூடி செய்தியாளர்களிடம் கூறுகையில், தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், அந்த நாடுகளுக்கு விமான சேவையை அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் ஆறு முக்கிய நகரங்களான சென்னை, டெல்கி, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத் ஆகிய நகரங்களிலிருந்து, தினசரி விமான சேவையை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# கடத்தப்பட்ட மீன்பிடிப் படகுகள் இராமேஸ்வரம் கரையில் மீட்பு

கடந்த மாதம் 29 ஆம் திகதி - மன்னாரில் பிடித்துவைக்கப்பட்டிருந்த 7 படகுகள், மர்மமானமுறையில் இராமேஸ்வரம் படகுத்துறைக்கு திரும்பிவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தமாதம் - 29 ஆம் திகதி 8 படகுகளில் மீன்பிடிக்கச்சென்ற, தமிழக மீனவர்கள் 32 பேர் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிப்பிரவேசித்தபோது, மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்டனர். மறுநாள் ஒரு படகுடன் 32 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சிய 7 படகுகளும் விடுவிக்கப்படவில்லை. இந்த ஏழு படகுகளும் பத்திரமாக இராமேஸ்வர படகுத்துறையில் கட்டப்பட்டுள்ளதாக, கியூபிராஞ்ச் பொலிஸாருக்கு நேற்று தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, பொலிஸார் அங்கு விரைந்து சென்றபோது, படகுத்துறையில் 7 படகுகளும் கயிற்றினால் கட்டப்பட்டிருப்பதை கண்டனர். யார் இந்தப் படகுகளை திருப்பிக் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்பது தெரியவில்லை. கடலோரப்படையினரின் தீவிர கண்காணிப்பையும்மீறி, எப்படி படகுகள் படகுத்துறைவரை கொண்டுவரப்பட்டன என்பது குறித்து பொலிஸாருக்கு புரியாத புதிராக உள்ளது. இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர்பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய்வதற்கு பிரதிநிதி நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களின் விசாரணை அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் பொருட்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்துப் பல நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும், அவை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டே இவ்வாறு பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவரது விசாரணையின் முடிவில் பெறப்படும் தகவல்கள் யாவும், இலங்கை அரசிற்கு அனுப்பப்பட்டு பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் றுவான் சந்திரசேகரவிடம் நமது செய்தியாளர் கேட்டபோது -

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சனை தொடர்பாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தம்மிடம் மட்டும் கிடைத்திருப்பதாகவும், இது தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்குப் பிரதிநிதி ஒருவர் நியமித்திருப்பது குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் தமக்கு இன்னமும் அறிவிக்கவில்லை எனவும் தெரிவித்தார். -(ப)

## சாகித்திய விழா

(யாழ்ப்பாணம்)

சாகித்திய விழா ஒன்றை வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினர் நடத்தவுள்ளனர்.

இந்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பட்டயக் கணக்காளர் கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளையும், கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திலுள்ள சாரதி அனுமதி அட்டைகளை, உரியவர்கள் இன்றும், நாளையும் பெற்றுக்கொள்ளமுடியும். இவ்வாறு பெற்றுக்கொள்ளாதவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்கள், மீண்டும் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார். (44)

## மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது

கியூடெக் நிறுவனத்தால் - மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது. நாவாந்துறை, மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த 110 மீனவர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவை யாழ்.குடா கடற்பரப்பில் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் செயற்பாடாக, இந்தியாவில் இருந்து மீளத் திரும்பிய நெடுந்தீவைச் சேர்ந்த 40 மீனவர்களுக்கும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயற்பாட்டிற்கான உதவியை எக்கோ நிறுவனம் மேற்கொள்வது குறிப்பிடதக்கது. இந்த மீனவர்களுக்கான உபகரணங்களை, யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வழங்கவுள்ளதாகக் கியூடெக் நிறுவன இணைப்பாளர் ஜெயக்குமார் தெரிவித்தார். (91)

## நோர்வே ஊடகவியலாளர் குடாநாட்டுக்கு விஜயம்

நோர்வே ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் - செவ்றி ரொம்றடோய் யாழ்.குடாநாட்டிற்கு வருகைதந்து, இங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்துள்ளார். கடந்த வாரம் குடாநாட்டிற்கு வருகைதந்த செவ்றி ரொம்றடோய் - கொக்குவிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குடாநாட்டு பத்திரிகை நிறுவனங்களுக்கும் நேரில் விஜயம் செய்த அவர், குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக உள்ளூர் பத்திரிகையாளர்களிடம் கேட்டறிந்து கொண்டார். இவருடன் தென்மாகாண ஐக்கிய ஊடகவியலாளர் சங்கத் தலைவர், வடக்கு - தெற்கு ஊடகவியளலாளர் சங்க செயலாளருமான டபிள்யூ.ரி.ஜே.எஸ். கவி ரட்ணவும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## உடுவில் இந்து இளைஞர்மன்ற ஆறுமுகநாவலர் தின நிகழ்வுகள்

(உடுவில்)

ஆறுமுகநாவலர் தினத்தை முன்னிட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் ஆறுமுகநாவலர் விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் பாடசாலையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு, நாவலரின் திருவுருவப்படம் - மருதனார்மடம் பைரவர் கோயிலிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தப்படும் சிறுவர் முன்பள்ளி மாணவர்களிடையே, நவராத்திரி தினத்தில் நடத்தப்பட்ட பேச்சு, மனனம், பண்ணிசைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு, பரிசில் வழங்கும் நிகழ்ச்சியும், இந்துமதக் குருமாரைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (101)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(சுதுமலை)

ஆறுகால்மடம் - அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுகூட்டம், நிலையத்தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நாளை இடம்பெறவுள்ளது.

இதில் சனசமூகநிலையச் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனையுடன், நிர்வாகத்தெரிவும் இடம் பெறவுள்ளதாக நிலையச்செயலாளர் தெரிவித்துள்ளார். (91)

## இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன், இலங்கை தொழிற்சங்கப் பெண்களின் கூட்டமைப்பு - இலவச மருத்துவமுகாம் ஒன்றினை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் நடாத்தவுள்ளனர்.

இந்த மருத்துவமுகாமில் நோயாளர்கள் - வைத்தியர்களினால் பரிசோதனை செய்யப்பட்டு, அவற்றுக்குரிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இந்த மருத்துவமுகாமில் பொதுமக்களும், விசேடமாக ஆசிரியர்களும் கலந்துகொண்டு பயன்பெறலாமென இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைச்செயலாளர் த.பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (44)

## தளபதி மதியின் நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ்.மாவட்டத் தளபதி லெப்.கேணல் மதியின் 15 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் - நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வலிகாமம் வடக்கு பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தலைவர் சி.சிவமகாராஜா தலைமையில், மல்லாகம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - முன்னதாக பொதுச்சுடரினை தெல்லிப்பளை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜனா, வலிகாமம் வடக்கு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் ஆகியோர் ஏற்றிவைக்க,

தமிழீழத் தேசியக்கொடியை - பிரதேச மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வசந்தி ஏற்றிவைத்தார்.

லெப்.கேணல் மதியின் திருவுருவப் படத்துக்கு - அவரது தாயார ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தார்.

## பனை அபிவிருத்திச் செயற்பாடுகள் தொலைக்காட்சியில்

பனை அபிவிருத்தி சபையினரின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் - ஐ.ரி.என். தொலைக்காட்சியில் இன்று சனிக்கிழமை 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பனை அபிவிருத்தித் சபைத் தலைவர் பொ.சிவபாதம், பொதுமுகாமையாளர் எஸ்.கோகுலதாசன், உற்பத்தி முகாமையாளர் புலேந்திரன் ஆகியோர் பனை அபிவிருத்திச் சபையின் நோக்கம், அதன் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களை வழங்கவுள்ளனர்.

இவற்றுடன், பனை அபிவிருத்திச் சபையின் தேவைகள், எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர். (91)

## கந்தரோடை பிரதான வீதியை புனரமைப்பதற்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பஸ்நிலையத்திலிருந்து, கந்தரோடை ஊடாகச் செல்லும் பிரதான வீதி - நாகேஸ்வரி வித்தியாசாலைவரை மிகவும் குறுகியதாகவும், தெருவோரங்கள் உடைந்து பாரிய குழிகளாகவும் காணப்படுவதனால் - மக்களும், வாகனச் சாரதிகளும் பலத்த இடையூறுகளைச் சந்திக்கவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பாதையின் அருகாகச் செல்லும் கழிவுநீர் ஓடை - வீதியின் மிக அருகாக அமைக்கப்பட்டிருப்பதாலும், வீதியின் அகலம் குறுகியதாக உள்ளதாலும், வீதிஅருகில் மரம், செடிகள் வளர்ந்துள்ளதாலும், போக்குவரத்துக்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

இது விடயத்தில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, வீதியை மேலும் இரண்டு அடி அகலமாக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (101)

## 5 கிராம அலுவலர் பிரிவுகள் வடமராட்சி கிழக்குடன் இணைவு

(ஆழியவளை)

பருத்தித்துறை பிரதேச செயல் பிரிவுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவின் 5 கிராம அலுவலர் பிரிவுகளும், மீண்டும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தப் பகுதிக்குச் சென்ற யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் - அந்தப் பகுதி மக்கள் முறையிட்டதையடுத்தே, அரசாங்க அதிபர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

மணற்காடு, குடத்தனை, பொற்பதி, அம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளே, மீண்டும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டவையாகும். (122)

# நியமனம்பெற்ற ஆசிரியர்களுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கு 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை - மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கு 17 ஆம் திகதி புதன்கிழமை - நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும், தென்மராட்சி வலய ஆசிரியர்களுக்கு 18 ஆம் திகதி வியாழக்கிழமை - சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம், தீவக வலய ஆசிரியர்களுக்கு 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை -யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் காலை 9 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களது கடமைகளும், பொறுப்புக்களும், சுயவிபரக் கோவையைப் பூர்த்திசெய்தல், ஆசிரியர்களின் கடமைகளும் உரிமைகளும், ஓய்வூதியமும் விசேட கொடுப்பனவுகளும் போன்ற விடயங்களில் துறை சார்ந்தவர்களும், சங்கத்தின் பிரதிநிதிகளும் கருத்துரை வழங்குவர். இவை தொடர்பான அச்சடித்த கையேடுகளும் வழங்கப்படும்.

ஆசிரியர்கள் தமக்கு வசதியான ஏதாவது ஒரு இடத்தில் கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம். 1998 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் பெற்ற சகல துறைசார்ந்த ஆசிரியர்களும் இதில் பங்குபற்றி, பயன்பெறலாம் எனச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : நி.சமீனா
முகவரி : மிருசுவில் வடக்கு, மிருசுவில்



பெயர் : எஸ்.றெஸ்மியா
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.



பெயர் : எஸ்.ஜஸ்மியா
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

நான்காவது அகவையில்



பெயர் : வி.ரிஷானி
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.



பெயர் : க.ஜிவர்த்தனா
முகவரி : சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

எட்டாவது அகவையில்



பெயர் : தெ.தர்மியா
முகவரி : சேமன் வீதி, கரவெட்டி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : பூ.ரஜீக்கா
முகவரி : வளர்மதி வீதி, கைதடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------

பெற்றோர் ஒ

## பொம்மை செய்வோம்



தடித்த தாள் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். தாளை நான்குமுறை மடித்தபின் ஒரு அங்குல தூரத்தில் வெட்டவும்.



அட்டைபோன்ற வடிவத்தில் மறுபக்கத்தில் வெட்டவும்.



படத்தில் காட்டியவாறு இலை வடிவத்தில் கீழிருந்து மேலாக வெட்டவும்.



பொம்மையின் உருவத்தை தனியே பிரித்தெடுக்கவும்.



இப்போது பொம்மையின் உருவங்கள் தயார்.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்




இங்குள்ள நாய்க்குட்டிகளில் ஒன்று வித்தியாசமாக உள்ளது. அதைக் கண்டுபிடியுங்கள்.

விடை அடுத்தவாரம்

## சென்றவார விடைகள்



## தெரிந்து கொள்ளுங்கள்

உலகில் மிக ஆழமான ஏரி - பைக்கால் ஏரி.
உலகில் மிகப் பெரிய தீபகற்பம் - அரேபிய தீபகற்பம்.
உலகில் மிக நீண்ட குகை - ரெஸ்பூடு, பாமிற்.
உலகில் மிக உயரமான எரிமலை - கொடாபாக்கினி.
உலகில் மிக நீளமான அணை - கௌஸ்டாம்.
உலகில் மிக ஆழமான அகழி - மரியானா.
உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - நயாகரா.

**லோ.காந்தரூபி**
**தரம்- 9**
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.**

இங்கே மடிக்கவும்



## மந்திரம் கால் மதி முக்கால்



சிராக்கஸ் நாட்டில் வாழ்ந்த ஆக்கிமிடிஸ் என்ற விஞ்ஞானியைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்கமுடியாது. கிறிஸ்து பிறப்பதற்கு முன், அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இந்த அறிவியல் அறிஞர்.

சிராக்கஸ் நாட்டை எதிரிக் கப்பல்கள் முற்றுகை இட்டது. அந்தக் நாட்டுக்குப் பாய் மரக்கப்பலில் உணவுப் பொருட்கள் வருவதை பகைவர்கள் தடுத்துவிட்டார்கள். முற்றுகை நீடிக்கவே, சிராக்கஸ் நாட்டு மக்கள் பட்டினியால் அவதிப்பட்டனர். முற்றுகைளை முறியடிக்க. ஆக்கிமிடிஸை அழைத்து, மன்னன் ஆலோசனை கேட்டான். ஆக்கிமீடிஸ் உடனடியாக உதவத் திட்டம் போட்டு, செயற்பட ஒப்புக்கொண்டார்.

ஆக்கிமிடீஸின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. கடற்கரையில் கட்டப்பட்டுள்ள பெரிய மதிற்சுவரின்மீது அவர் பெரிய குவிவாடியை எடுத்துக்கொண்டு ஏறி அமர்ந்தார். காலையில் கிழக்கே உதிக்கும் சூரியனின் ஒளிக்கதிர்களை, குவிவாடி வழியாக கடற்கரைப் பகுதியிலுள்ள பகைவர்களின் பாய்மரங்கள் மீது குவியச்செய்தார்.

(இப்போதும் சூரியனின் ஒளிக்கற்றைகளை குவிவாடி வழியாக, ஓரு காகிதத்தின்மீது குவியச்செய்தால், ஒளி குவிந்த இடம் சற்றுநேரத்தில் தீப்பிடித்துக் கொள்வதைக் காணலாம்.)

இதே முறையைத்தான் ஆக்கிமிடிஸ் அன்று கையாண்டார். அதனால், பாய் மரங்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தன. எதிரிப் படைகளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ மந்திர சக்தியால் தீப்பிடித்து எரிவதாக எண்ணி, கப்பல்களை அப் புறப்படுத்தத் தொடங்கினர்.

அதுபோலவே, மதில் சுவர்களில் மிகவும் நீளமான நெம்பு கோல்களைப் பொருத்தி, வெளியே கடற்பக்கம் உள்ள எதிரிகளில் கப்பல்களை கொக்கியால்மாட்டி, கடலிருந்து மேலே தூக்க ஆரம்பித்தார். இதுவும் ஏதோ குட்டிச்சாத்தான் வேலை தான் என எண்ணிய எதிரிகள் - பயந்து ஓடத்தொடங்கினார்கள்.

ஆக்கிமிடிஸின் விஞ்ஞான அறிவு - தாய் நாடான சிராக்கஸ் நாட்டை எதிரிகளின் முற்றுகையில் இருந்து மீட்டது.

## உயிரியல்

1. வெள்ளைநிறமான இரத்தமுள்ள பிராணிகள் - வெட்டுக்கிளி, கரப்பான்பூச்சி.
2. குரல் இல்லாத மிருகம் - ஒட்டகச்சிவிங்கி.
3. நீர் குடிக்காத பிராணி - எலி.
4. தனது உடலைவிட நாக்கு நீளமாக உள்ள பிராணி - ஓணான். (பச்சோந்தி)
5. ஒரு தடவை மணந்தால் வாடிவிடும் பூ - பனிச்சம்பூ.

த.தாட்சாயினி



## சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## எகிப்து

**தலைநகர் - கெய்ரோ**
**பரப்பளவு - 10,01,000 ச.க.மீ.**
**மொழி- அரபி, ஆங்கிலம் .**
**சமயம் - கிறிஸ்தவம், இஸ்லாம்.**
**நாணயம் - பவுண்.**
**சராசரி ஆயுள் - 66.7**
**ஆண் - 65.1**
**பெண் - 68.3.**
**முக்கிய நகரங்கள் - கெய்ரோ, போர்ட், செட்போர்ட், அலக்சாண்டிரியா.**



ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்

தொன்மையான நாகரிகத்தைக்கொண்ட நாடுகளில் எகிப்தும் ஒன்றாகும். இந்த நாடு ஆபிரிக்காவின் வடமூலையில் அமைந்துள்ளது. இந்த நாட்டில் அமைந்துள்ள பிரமிட்டுக்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அக்காலத்தில் எகிப்தை ஆண்ட 'பாரோ' எனப்படும் மன்னர்கள் - தமது மரணத்தின் பின்னர் தமது உடல்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த பிரமிட்டுக்கள் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த இறந்த உடல்களை 'மம்மி'கள் என அழைத்தார்கள். உலகில் மிகநீண்ட நதியான நைல் நதியும், மிக பிரபல்யம் வாய்ந்த சுயஸ் கால்வாயும் இந்த நாட்டில்தான் அமைந்துள்ளன. இதன் காரணமாக, வர்த்தகம் செய்யும் நாடுகளிடையே இந்த நாடு செல்வாக்குப்பெற்று விளங்குகின்றது. மூன்று தடவைகள் இஸ்ரேலுடன் போர் நடைபெற்றபோதும், பின்னர் மத்திய கிழக்கில் சமாதான முயற்சிகளில் முன்னின்று உழைத்து வருகின்றது. தற்போது மொகமட் ஹொஸ்னி முபாரக் ஜனாதிபதியாக பதவியில் உள்ளார்.

விவசாய உற்பதிகளாக - பருத்தி, சோளம், ஒரேஞ், உருளைக் கிழங்கு, கோதுமை என்பனவும், உற்பத்திகளாக - இரசாயனங்கள், பருத்தித் துணிகள், உரம் என்பனவும், கனியங்களாகப் பெற்றோலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ம. மேனன்
கற்கும் பாடசாலை :-
தேவரையாளி இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :- தி. ஜனாகரன்
கற்கும் பாடசாலை :-
இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- செ. குகராஜ்
கற்கும் பாடசாலை :-
ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், கதைப்புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- வே. சேயோனி
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- பி. தொமஸ் அன்ரனி வேக்மன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- சி. ஸ்ரீராம்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- இ. அனுசியா
கற்கும் பாடசாலை :-
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், ஓவியம் வரைதல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
........................................

........................ திகதி ........................ ஒப்பம்

........................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........................ பெற்றோர் ஒப்பம்



**அன்புச் சிறுவர்களே!**

நாம் செலவழிக்கும் ஒவ்வொரு நிமிடங்களும் உன்னதமானது. திரும்பப்பெற முடியாதது. நேரத்தை வீணாக்காமல், கருத்தோடு செலவழிக்கும்போது, அதனுடைய பலனை அனுபவிக்க முடியும். எப்படி என்றா கேட்கின்றீர்கள்?

பலாப்பழம் இருக்கிறது, அதனை அப்படியே சாப்பிட முடியாது. ஒவ்வொரு சுளையாகத் தந்தால் சாப்பிடுவீர்கள். அதேபோல்தான் நிறைய படிக்கவேண்டியிருக்கிறதே. பெரிய பெரிய பாடமாய் இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா?

ஒவ்வொரு அரைமணி நேரத்துக்கும் ஒரு பகுதி என்று பிரித்துப் படித்துப் பாருங்கள். உங்களால் உற்சாகமாகவும், விரைவாகவும் படிக்கமுடியும். இலகுவாகவும் இருக்கும். அடுத்த புதுவகுப்புக்கு இப்பொழுதே தயாராகுங்கள். வெற்றி நிச்சயம்.

பாசமுடன் -சாரு அக்கா

இங்கே மடிக்கவும்



# உங்கள் கைவண்ணம்



இ. சுதாகரன்
தரம் - 10
விக்னேஸ்வராக் கல்லூரி.



க. துர்மதா
ஆண்டு - 10
இந்து மகளிர் கல்லூரி.

## ஐந்து வித்தியாசங்களுக்கான விடைகள்

1. ஒட்டகத்தின் வால். 2. கால்குளம்பு. 3. தொப்பி. 4. சூரியனின் கதிர்கள். 5. ஸ்ரோ.

## My Self

My name is Lokanathan Kantharoopi. I live in Navindil. I am fourteen years old. My fathers name is Lokanathan. My mother's name is Rani. I study at J/Uduppiddy girl's college. I have one sister and one brother. My favourite subjects are English and Maths. My friend name is Logitha. My favourite game is netboll. I want to be an Accountant.

L.Kantharoopi
Grade - 9
J/Uduppiddy Girl's College

## பாடி ஆடுவோம்

மயிலைப் போல ஆடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
குயிலைப் போலக் கூவுவோம்
கூடிக் கூடி ஆடுவோம்

தவளை போல நாமுமே
தத்தித் தத்திச் செல்லுவோம்
முயலைப் போல நாமுமே
முன்னே பாய்ந்து ஓடுவோம்

ஆனை போல நாமுமே
அசைந்து அசைந்து
செல்லுவோம்
குதிரை போல நாமுமே
குதித்துக் குதித்து ஓடுவோம்

மானைப் போல ஓடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
பாடிப் பாடி ஆடுவோம்
பாப்பாப் பாட்டுப் பாடுவோம்

கவிஞர் த. துரைசிங்கம்

## விடுகதைகளும் விடைகளும்

1) அனைவரையும் நடுங்க வைப்பான், அதவனுக்கே அடங்குவான். அது என்ன?
2) வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன். அவன் யார்?
3) நீரில்லா குளத்திலே, நீண்ட கொடி ஒன்று வாடாது, வதங்காது, பூக்காது, காய்க்காது. அது என்ன?
4) நீந்தத் தெரியாதவன் நீருக்குள் குதிக்கிறான். அவன் யார்?

விடைகள்

1) குளிர் 3) கைரேகை
2) தபாற்பெட்டி 4) வாளி

## வருடங்கள்

சாதாரணமாக ஒரு வருடத்திற்கு 3651/4 நாட்கள் என்று கூறுகின்றோம். இந்த சாதாரண வருடம்போல, ஏழு விதமான வருடங்கள் உள்ளன என்பதும், அவை என்னவென்றும் தெரியுமா?

1. லூனார் வருடம் - 954 நாட்கள்.
2. லீப் வருடம் - 366 நாட்கள்.
3. ஜூலியன் வருடம் - 356 1/2 நாட்கள்.
4. கோலார் வருடம் - 365 நாட்கள், 5 மணித்தியாலம், 48 நிமிடம், 8 செக்கன்.
5. சைபில் வருடம் - 368 நாட்கள், 6 மணித்தியாலம், 9 நிமிடம், 8 செக்கன்.
6. அனாமலிஸ்லிக் வருடம் - 365 நாட்கள் 6 மணித்தியாலம் 13 நிமிடம் 19.3 செக்கன்.
7. கிரிகோரியன் வருடம் - 965 நாள், 5 மணித்தியாலம், 49 நிமிடம், 12 செக்கன்.

## நாடும் ~ மொழியும்

| | |
|---|---|
| கனடா | - ஆங்கிலம், பிரெஞ்சு |
| சீனா | - மண்டரீன் |
| எகிப்து | - அராபி |
| இலங்கை | - தமிழ், சிங்களம். |
| ஈராக் | - அராபிக் |

மா. நாகவதனி
தரம் - 5
தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி.

## மண் வகைகள்

1) செங்கபில மண்
2) கல்சியமற்ற மண்
3) செம்மஞ்சள் அற்றசோல்
4) கல்சியமுள்ள செம்மஞ்சள் அற்றசோல்
5) செங்கபில அற்றசோல்
6) செம்மஞ்சள் பொட்சோல்
7) முதிர்ச்சியில்லா கபிலமண்
8) கருமண்
9) வண்டல்மண்
10) பழைய வண்டல்மண்
11) மணல்மண்
12) உவர்மண்
13) சதுப்பு (சேற்று நில) மண்

ஆர். தேனுகா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## பழங்களும் அதன் பிறப்பிடங்களும்

| | |
|---|---|
| திராட்சை | - கஸ்பியன் கடல்பகுதி |
| அன்னாசி | - பிரேசில் |
| வாழை | - தென்கிழக்கு ஆசியா |
| கொய்யா | - மத்திய அமெரிக்கா |
| பப்பாளி | - மெக்சிக்கோ |
| முந்திரிகை | - பிரேசில் |
| மாம்பழம் | - தென்கிழக்கு ஆசியா |
| பலாப்பழம் | - இந்தியா |
| தோடம்பழம் | - சீனா |
| நெல்லி | - இந்தியா |
| எலுமிச்சை | - இந்தியா |

ச. மஞ்சுகி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம்

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணிலுக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவிலும், தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பது தொடர்பாகவோ, சமாதானத்தை யார் எந்தவகையில் முன்னெடுப்பது என்பது தொடர்பாகவோ எந்தவிதமான தீர்மானமும் எட்டப்படவில்லையென்ற செய்தியானது, இரு தரப்பினருக்கும் இடையேயான அதிகாரப் போட்டி எந்த வகையிலும் ஒரு புரிந்துணர்வு நிலையை எட்டுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை அழுத்தமாகவே உணர்த்தியுள்ளது.

பிரதமர் ரணிலைப் பொறுத்தவரையில், தான் அமெரிக்கா சென்றிருந்த வேளையில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளினால் அவருக்கு ஏற்பட்ட அரசியல் பின்னடைவின் தாக்கங்களை அவரால் மறக்கவோ, சந்திரிகாவின் குழிபறிப்பு நடவடிக்கைகளை மன்னிக்கவோ முடியவில்லை என்பதும் உண்மையே.

ஆனாலும், அவர் மிகவும் நிதானமாக, ஜனாதிபதியுடன் முரண்படாத ஒருவராகத் தன்னைக் காட்டிக்கொண்டு, அரசியல் நகர்வுகளை நாடும், சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ளும் வகையில் மேற்கொள்வதானது, அவரது அரசியல் அனுபவஞானத்தின் வெளிப்பாடேயாகும்.

சந்திரிகாவுடனான அரசியல் பேச்சுக்களை மட்டுமல்ல விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களைக் கூட ரணில் மேற்கொண்ட விதமும் இத்தகைய தந்திரோபாயத்தின் அடிப்படையிலானதே. எனினும், விடுதலைப் புலிகளுக்கு, சந்திரிகாவின் சமாதான அணுகுமுறைகளின் நோக்கங்களை மட்டுமல்ல, ரணிலின் உத்திமுறைகளும் கூட நன்கு தெரியும். அதனால்தான் சந்திரிகாவின் அதிரடி அரசியல் சதி நடவடிக்கையானது, ரணிலின் சமாதான முயற்சிகளை நெருக்கடிக்குள் தள்ளியபோது, பேரினவாதிகளின் சகோதரத்துவ அரசியல் முரண்பாடுகளின் தன்மையைப் புரிந்துகொண்டு மௌனம்காத்ததுடன் சமாதானம் குறித்த தனது நிலைப்பாட்டின் உறுதித்தன்மையினை அதனை வலியுறுத்திநிற்கும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படையாகவே உணர்த்தியும் கொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட முக்கிய மூன்று அமைச்சுக்கள் பறிபோன நிலையில் சமாதானம் தொடர்பாக தீர்மானங்கள் எதையும் சுயமாக மேற்கொள்ளும் வலுவற்ற நிலையில் உள்ள ரணில், தொடர்ந்தும் சமாதான நகர்வுகளை முன்னெடுக்கும் பொறுப்பை சந்திரிகாவிடம் ஒப்படைப்பதாகக் கூறியதையடுத்து எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்களுடன்கூடிய அறிவுறுத்தல்கள் சந்திரிகா எதிர்பார்த்திராத ஒன்றாகும்.

ஏற்கனவே, விடுதலைப் புலிகளுடன் சமாதானம் குறித்து பேசிய முன்னனுபவம் உள்ள சந்திரிகா, தனது இராஜதந்திர வியூகங்கள் எவையும் விடுதலைப்புலிகள் தற்போதுள்ள வலுவான நிலையில் - சர்வதேச சமூகத்தின் கவனத்தை அதிகம் ஈர்த்துள்ள நிலையில் - செல்லுபடியாகாது என நன்கு புரிந்துகொண்டுள்ளமையால் சமாதானத்தை முன்னெடுக்கும் பொறுப்பினை ஏற்று சிக்கலுக்குள் மாயத்தயாராக இல்லை.

அதுபோல் ரணிலும் இடைக்கால நிர்வாக அதிகார சபை கட்டமைப்பு குறித்த வரைபினை விடுதலைப் புலிகள் கையளித்துள்ளதையடுத்து, அடுத்து அது குறித்து என்ன செய்வது என்று தெரியாது குழம்பவேண்டிய நிலையில் சந்திரிகாவின் அதிரடி அரசியல் நடவடிக்கை ரணிலுக்குப் பெரிதும் கைகொடுத்துக் காப்பாற்ற, சமாதானத்தை முன்னெடுக்கும் பொறுப்பை தனது அதிகாரமற்ற தன்மையைக் காட்டி, சந்திரிகா தலையில் சுமத்திவிட்டார். சந்திரிகா அதனைத் தொடர்ந்து சுமக்கவோ, தூக்கி வீசவோ முடியாத நிலையில் மாற்று நடவடிக்கையொன்றை எவ்வகையிலாவது மேற்கொண்டு சமாதானத்தினை சுமக்கும் பொறுப்பை மீண்டும் ரணிலிடம் ஒப்படைக்கப்படாதபாடு பட்டு வருகிகிறார்.

ஆனால், ரணில் அவரது வியூகத்துள் விழுவதாக இல்லை. அதே சமயம் சர்வதேச சமூகம் சிறிலங்காவின் அதிகார பீடத்தவரை குறிப்பாக ஜனாதிபதியை - ரணிலுடனான அரசியல் முரண்பாட்டைச் சுமுகமாக தீர்த்துக் கொண்டு சமாதான முயற்சிகளை தொடருமாறு வலியுறுத்துகின்றது. இந்த நிலையில், சமாதானம் உடைந்து போவதற்கான சூழல் ஏற்படின் அதற்கான முழுப் பொறுப்பும் தனது தலையில் விழுந்து விடும் என அஞ்சும் ஜனாதிபதி எதுவும் செய்ய முடியாத நிலையில் பிரதமர் மீதான வெறுப்பையும், கொதிப்பையும் மூடிமறைத்துக் கொண்டு எப்படி இயல்பாகப் பேசமுடியும்?

இதே நிலைதான் ரணிலுக்கும்....

இந்தக் கட்டத்தில் தேர்தல் ஒன்று மட்டுமே ஒரு மாற்று வழியாக அமையக்கூடும்.

ரணில் அதனையே எதிர்பார்த்திருக்கிறார் என்பது தெளிவு.

ஆனால் சந்திரிகா அதற்குத் தயாராக இல்லை. இந்த சிக்கலான நிலையில் சிறிலங்காவின் அரச இயந்திரங்கள் இரண்டும் எதிர்எதிர் செயற்பாடுகளுடன் இயங்கியபடி சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும். இணைந்து இயங்கும் சாத்தியமே இல்லை. இதுவே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி :- தொண்டர் படைத்தளபதியாக பௌத்தமத சடங்குகளின் பின்னர் சரத் பொன்சேகா பதவியேற்பு.

# இராணுவ பாதுகாப்பு வலயங்களை ஜனாதிபதி குறைத்து வருகிறார்!

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னரும், பாதுகாப்பு விடயத்தில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. மாறாகப் பாதுகாப்பு வலயங்களின் எல்லைகளைக் குறைத்து வருகிறார்.

இதற்கென படைகளுக்கான கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் இடமாற்றம் செய்துள்ளார் என, சிஹல உறுமயத் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார். நேற்றுமுன்தினம் அவர்களது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வன்னி மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரியாகச் செயற்பட்டு இடமாற்றம் பெற்ற மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால - வன்னி மாவட்டப்புலிகளின் அலுவலகத்துக்குச்சென்று, புலிகளின் தலைவர்களைச் சந்தித்துள்ளார். படை உயர் அதிகாரியொருவர் புலிகளின் முகாம்களுக்குச் செல்வது கௌரவமற்ற செயலாகும்.

சுசில் சந்திரபால - யாழ்.மாட்ட கட்டளையிடும் அதிகாரியாகப் பொறுப்பேற்ற பின்னர், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சனைதீரும் என, வன்னி மாவட்டப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் கூறியுள்ளதன் அர்த்தமென்ன? அமைச்சர் மகேஸ்வரன் தனது அடியாட்களை வைத்து, இராணுவத்தினர் பலாலிக்குச் செல்லும் பாதையைத் தடைசெய்தார். இதன் மூலம் அவர் இருமுறை சாதாரண சட்டத்தை மீறியுள்ளார்.

ஐ.தே.முன்னணி அரசு அல்லது பிரதமர் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்றரீதியில், அமைச்சர் மகேஸ்வ ரன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகளின் செயலாளர் பதவிக்கு, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பெயரைக் கடைசி நேரத்தில், ஜனாதிபதி சந்திரிகா சிபாரிசு செய்திருந்தார். அந்த சிபாரிசுக்குப் பிரதமர் ரணிலும் இணக்கம் தெரிவித்திருந்தார். ஆனால், விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலின்பேரில், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் எனவும் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடும் அதிகாரமும், உரிமையும் இந்தியாவுக்கே உரியது எனவும், இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் ராஜ்கோத்ரா, பேராசிரியர் எஸ்.ஜி.முனி, இந்தியாவின் கிழக்குப் பிராந்திய முன்னாள் கட்டளைத் தளபதி தாஸ் ஆகியோரும் - புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள திட்டவரைபு ஏற்றுக்கொள்ளமுடியாதது எனவும், புலிகள் இயக்கத்தின் கடற்புலிகளை - கடற்படையாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கூறியுள்ளனர். புலிகள் இயக்கத்தின் இடைக்காலத்திட்ட வரைபு குறித்து இந்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துவிட்டனர். ஆனால், இலங்கை அரசாங்கம் இன்னும் மௌனம் சாதித்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதமரின்கீழ் பாதுகாப்பு அமைச்சு அரசியல் யாப்புக்கு முரணானது!

## ஜே.வி.பி. தெரிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசின்கீழ், பாதுகாப்பு அமைச்சு இருப்பது யாப்புக்கு முரணானதாகும்.

இவ்வாறு, ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து பிரதமர் ரணில் - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்பதையிட்டு, எமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. அரசியல் யாப்புத்தான் நாட்டின் அடிப்படைச் சட்டங்கள். எனவே, இந்த யாப்பில் மாற்றங்கள் செய்யும்வரை அதற்கு அனைவரும் மதிப்பளிக்கவேண்டும்.

அத்துடன், பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்திடம் சகல அதிகாரங்களும் இருந்தாலேயே, பேச்சுவார்த்தைக்கு மீளவும் திரும்புவதென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இது - புலிகளுக்கும், பிரதமர் ரணிலுக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வு உள்ளது போலுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டத்திற்கு முரணான வகையில், ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சைக் கோருவது - விடுதலைப் புலிகளின் தலைவர் நாட்டின் மூன்றிலொரு பகுதியையும், அறுபதுவீத கடல்வளத்தையும் கேட்பது போலுள்ளது.

ஜனாதிபதி - அரசியல் யாப்பின்படி அதிகாரத்தை வைத்திருப்பதனால், எவரும் ஒன்றும் செய்யமுடியாது. தற்போதைய சூழ்நிலையில்- ஜனாதிபதியும் சர்வதேச வலைக்குள் சிக்கக்கூடாது. இவ்வாறு, வலைப்பின்னலின் அடிப்படையில் தான், ஜனாதிபதிக்கெதிராக அண்மையில் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டதெனவும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பி.பி.ஸி செய்தியாளர் குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(லண்டன்)

பி.பி.ஸி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் குழுவொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளது. இந்தக் குழுவில் 'தமிழோசை' செய்தியாள்ள் தி.மணிவண்ணன், பி.பி.ஸிக்கான தெற்காசியப் பிரிவின் பொறுப்பதிகாரி சாம் மில்லர், சந்தேசிய செய்தியாளர் பிரியத் லியனகே ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் யாழ். பீச் ஹோட்டலில், உள்ளூர் செய்தியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது, உள்ளூர்ப் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களுக்கு பி.பி.ஸி செய்தி நிறுவனமூடாகப் பயிற்சி அளிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் குடாநாட்டுப் பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் - சுயாதீனச் செய்தியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். இவர்கள் அனைவரும் குடாநாட்டில் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களுக்குப் படைத்தரப்பினரால் விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பாகவும், பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் தொழில்நுட்ப வசதிகள் தொடர்பான இடாபாடுகள் தொடர்பாகவும் பி.பி.ஸி குழுவினருக்கு எடுத்துரைத் தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பி.பி.ஸி குழுவினர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர். சில நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கவுள்ள இந்தக் குழு - யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இந்தியாவிலிருந்து மீளத்திரும்பும்





# அகதிகளின் அவலம் தீருமா?

நெடுந்தீவில் இருந்து கடந்த 13 வருடங்களுக்குப் முன்னர் - நாட்டின் அசாதாரண



சூழ்நிலை காரணமாக அகதிகளாக இந்தியாவுக்குச் சென்று, அங்கே அகதி முகாம்களில் சொல்லொணாத் துயரங்களைச் சுமந்து, தற்போது மீண்டும் சொந்த இடங்களுக்கு தங்கள் உயிரைத் துச்சமாக நினைத்து, இந்திய மீன் பிடிப்படகுகளில் வந்து



மீளக்குடியமர்கின்றனர்.

இங்கிருந்து செல்லும்போது எதனையும் எடுத்துச்செல்லாது உயிரைக் காப்பாற்றப் போனவர்களே, மீண்டும் சொந்த இடம் வந்துள்ளனர். இங்கே அவர்களது குடிமனைகள் எல்லாம் சிதைவடைந்து போயுள்ளதுடன், அவர்களின் தொழில் உபகரணங்கள், உடமைகள் எல்லாம் ஏற்கெனவே விற்கப்பட்ட பின்தான இந்தியாவுக்கே சென்றார்கள். இப்போது இருக்க வீடுமில்லை, உண்ண உணவுக்கும் திண்டாட்டம், தொழில் செயய முதலில்லை. இங்கும் உறவினர் வீடுதான் தஞ்சம். இப்போதும், அகதி வாழ்வுதான்.

இந்தியாவிலிருந்து வந்தவர்களைப் பலவிதமான பதிவுகள் எல்லாம், பலவிதமானோர் எடுத்த பின்பே உள்நுழைய அனுமதிக்கின்றனர் அத்துடன், இவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் உள்ள தொடர்புகள் கொஞ்சம் விலகுகின்றது.

இந்தநிலையில், மீள்குடியமர வந்தவர்கள்- தங்களுக்கு நிவாரணம் வேண்டும், உதவி வேண்டும் எனச் செயலகத்தில் நாளாந்தம் முறையிடுகின்றனர். இவர்களது கோரிக்கைகள், முறையீடுகள் நியாயமானது. இதற்கு அரச நிர்வாகம் என்ன செய்கிறது. இது தொடர்பாக எடுத்த நடவடிக்கை என்ன?

தற்போது வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் 2003 - ஆவணி மாதத்துக்கானது. ஆவணி மாதத்தில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு தற்போதே இந்த நிவாரணம் கிடைத்தது. இந்தநிலையில் கடந்தமாதம் 12 குடும்பங்களைச்சேர்ந்த 37 பேர் மீளக்குடிய மர்ந்தனர். இவர்களுக்கான உணவு நிவார ணம் அடுத்தகட்டத்தில் கிடைக்குமோ என்பது கேள்விக்குரியதுதான். ஏனென்றால், அடுத்துக் கொடுக்கப்போவதோ புரட்டாதி மாதத்துக்கானது. இவர்கள் வந்ததோ கார்த்திகை மாதம். இந்த நிலையில், சாதாரணமாக இங்குவாழும் மக்களுக்கு போன்றே இவர்களுக்கும் நடைமுறை.



ஏன் இந்த நடைமுறையை மாற்றக்கூடாது? இவ்வாறு இந்தியாவில் இருந்து வருபவர்களுககு உடனடியாக உணவுப் பொருட்கள் வழங்க அரச நிர்வாகம் நடவடிக்கை எடுக்கக்கூடாதா? பல.நோ.கூ. சங்கங்கள் ஊடாக வேனும் இதனை மேற்கொணடு, பின்னர் சீர் செய்யலாம்தானே. அகதியாய் இருந்து வந்தவர்கள் - சொந்த மண்ணில் வந்து உணவுக்கு அலையவேண்டிய அவதிநிலைதானா?

இந்தவகையில், கத்தோலிக்க மதகுரு- யாழ். ஆயர்மூலம் உதவிபெற்று உணவுப் பொருட்களை வழங்கினார். அதேபோல, இவ்வாறு வந்த மக்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், UNHCR நிறுவனத்தினரும் வீட்டுப் பாவனைப்பொருட்களை வழங்கியுள்ளனர். இதனைப் பார்க்கும்போது, அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களை நம்பியே தமிழர் வாழ்வு ஓட்டிச்செல்லப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. இந்தளவில் இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமரும் மக்களுக்கு, முதலில் உணவுத் தேவையை ஆயினும் பூர்த்திசெய்ய அரச அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்து, அவல வாழ்வின் தொடர்ச்சியை நிறுத்த வழிசமைக்க வேண்டும்.

**கண்ணன்.**

# வானம் வழங்கும் நீரை நாம் வீணடிக்கலாமா?

**அன்று காலந்தவறாது வானந்தந்த மழைநீர், இன்று காலங்கெட்டு, வானம் பொய்த்து, தான் விரும்பியபடியெல்லாம் பெய்கிறது. அது கொட்டும் மழையாகவல்ல சொட்டு மழையாகப் பெய்கிறது. இப்படிச் சொட்டு மழையாகப் பெய்யும் பெறுமதிமிக்க மழைநீர்கூட - விளைநிலங்களையும், குளங்குட்டைகளையும் நிறைத்து செழிப்புற வைக்கமுடியாமல், எங்கெங்கோ செல்கிறது, சேதத்தை ஏற்படுத்துகிறது.**

இருபதுவருட ஈழப்போரில் இடிந்து, உடைந்து, உருக்குலைந்து அழிந்துபோன நகரங்கள் யாழ்.குடாநாட்டில் ஏராளம். அவற்றில் ஒன்று நெல்லியடி. இவைகள் மீண்டும் புதுப்பொலிவு பெறாதா? இடிந்த கட்டடங்கள் மீளவும் தலைநிமிர்ந்து ஏழாதா? என்று ஏங்கிய உள்ளங்களுக்கு - ஆறுதலளப்பனவாகக் கொண்டுவரப்பட்டதே புரிந்துணர்வு உடன்பாடும், போர்நிறுத்தமும். இதன் காரணமாக இடிந்த கட்டடங்கள் பல தலைநிமிர்ந்து நிற்கின்றன.

துரிதகதியில் முன்னேறவேண்டும் என்ற வேட்கையில், நெல்லிநகர் நாளுக்கு நாள் புதிய கட்டடங்களை எழுப்பிக்கொண்டிருக்கிறது. பிரதேசசபை தன் சட்டதிட்டங்களை இறுக்கிப் பிடிக்கும்முன், கட்டிமுடித்துவிட வேண்டுமெனற எண்ணங்களாகக்கூட அவை இருக்கலாம்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற கடலோரமாக அமைந்த நகரங்கள் போல்லாது, சற்று உள்நோக்கி கடலிலிருந்து ஏறக்குறைய 3,4 மைல்கள் தூரத்திலேயே நெல்லியடி அமைந்துள்ளது. மின்சாரசபை, தொலைத் தொடர்புநிலையம், வங்கிகள், சந்தைகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள் இப்படிப் பற்பல வசதிகளை விரிவுபடுத்தி, தன்னை வளர்ப்பதில் வேக நடைபோடுகிறது. நிறைவுகள் எப்படியிருப்பினும், இந்த நகரத்தின் குறைவுகள் நிச்சயம் சுட்டிக்காட்டப்படவேண்டியனவாகும்.

பல குக்கிராமங்களை உள்ளடக்கி, பரந்த நிலப்பரப்பைக்கொண்ட கரவெட்டி என அழைக்கப்படும் பிரதேச செயலர் பிரிவுக்குள் தலைநகரமாக விளங்குவது நெல்லிநகர். தென்மராட்சி மக்கள் எவ்வாறு தென்னந்தோப்புக்களுக்கு உரிமையாளர்களாக விளங்கினார்களோ, அதேபோல் பனந்தோப்புக்கள் இந்நகர மக்களின் பாரிய சொத்தாகத் திகழ்ந்தன. அந்தப் பனந்தோப்புக்கள் மாரியில் மழை நீரைக் கடல்போல் சேகரித்து வைத்திருக்கும். சிறுவர்கள் அந்நீரில் காகிதக்கப்பல் செய்து ஓடவிட்டுப் பார்த்து மகிழ்வர். மாரி விடாது பெய்யும். மரஞ்செடிகள் மகிழ்ச்சிபொங்கித் தலைநிமிர்ந்து நிற்கும். வெள்ளம் பாய்வதற்கென்றே வெட்டிவிடப்பட்ட வாய்கால்கள் வழியாக மழைநீர் துள்ளிக்குதித்துப்பாயும்.

நெல்லியடியின் வடக்குப் புறமாகவுள்ள பிரதேசத்து வெள்ளமெல்லாம், ஓடிப்போய்ச் சேருமிடமாகப் பாணந்துறை எனும் பள்ளமான இடம - பரந்த இடமாக அமைந்திருந்தது. அங்கு சேரும் வெள்ளம், எங்குபோய்ச் சேருகின்றதென்பது எவருக்கும் தெரியாது. பூமிக்கடியில் அந்நீர் எப்படியோ போய்ச்சேர்ந்துவிடும்.

பாரிய தோட்டவெளியாகவிருந்த பாணந்துறை - இன்று மக்கள் நிறைந்து வாழும் பாரிய கட்டடங்களை எழுப்பிநிற்கிறது. பசுமை நிறைந்த பூமியை உருவாக்கிய பனந்தோப்புக்கள் மாயமாய் மறைந்துவிட்டன. தப்பிப் பிழைத்து, தலைநிமிர்ந்துநின்ற ஒன்றிரண்டு தோப்புகள்கூட படையினரால் தலைசாய்க்கப்பட்டன, பரந்த நிலப்பரப்பு - குன்றுங்குழியுமாக்கப்பட்டு, மண் அணைகளாக்கப்பட்டன. எங்கெங்கெல்லாம் மடைதிறந்த வெள்ளம் போல் பாய்ந்தோடி, பசுமை நிறைந்த பூமியாக்கிய மழைநீர், இன்று எங்கே? என்ற வினா மட்டுமே எஞ்சியிருக்கிறது.

அன்று, காலந்தவறாது வானந்தந்த மழைநீர் - இன்று காலங்கெட்டு, வானம் பொய்த்து, தான் விரும்பியபடியெல்லாம் பெய்கிறது. அது கொட்டும் மழையாகவல்ல, சொட்டு மழையாகப் பெய்யும் பெறுமதிமிக்க மழைநீர்கூட- விளைநிலங்களையும், குளங்குட்டைகளையும் நிறைத்துச் செழிப்புற வைக்கமுடியாமல், எங்கெங்கோ செல்கிறது. சேதத்தை ஏற்படுத்தி, தேவையற்ற இடங்களில், தேவையற்று மழைநீர் தேங்கிநிற்பதால் - வீண்சண்டைகளும், வாக்குவாதங்களும் நிறைந்த நகரமாக நெல்லியடி மத்தியபகுதியும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களும் காணப்படுகின்றது.

நெல்லியடி மத்தியபகுதி - சனநெரிசல் கூடிய இடம். தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கூட்டமும், வங்கிகள், சந்தைகள், காரியாலயங்களுக்குச் செல்லும் மக்கள்கூட்டமும் - எந்தநேரமும் நிறைந்து காணப்படும் இத்தகைய நெருக்கடிமிக்க நகரப் பகுதியிலே, மழைநீர் வழிந்தோட வழியேயில்லை. வீதியில் தேங்கிநிற்கும் மழைநீரில் பெரும்பகுதி - அயலிலுள்ள வீடுகளிலிருந்து வந்தவை. இவை ஆங்காங்கே தேங்கி நின்று, வீதியில் வாகனங்கள் வரும்போதும், போகும்போதும் அவ்வழியே செல்லும் பாதசாரிகளைப் பதம்பார்க்கத் தவறுவதில்லை. வீட்டிலிருந்து வீதிக்கு வந்த மக்கள் - திரும்பி வீட்டிற்குச் செல்லும்போது, பெரும்பாலும் நனைந்த கோழிகளாகவே செல்லவேண்டிய அவலநிலை. மழையென்றால் என்ன, வெயிலென்றால் என்ன, இப்பகுதியில் வாகன ஓட்டுநர்கள் சிலர் நிதானமிழந்து வேகமாக வண்டிகளைச் செலுத்தும்போது, வீதியோரம் தேங்கிநிற்கும் மழைநீர் - சிரீப்பாயத்தானே செய்யும். இதைவிட, வீதியோரங்களில் நிற்கும் மழைநீர் - வியாபாரநிலையங்களின் வாசல் வரை வந்துவிடக்கூடாதென்பதற்காக, ஆங்காங்கே வாய்க்கால்களை வெட்டுவதும், மண்மேடுகள் அமைப்பதும், விபத்துக்களை மேலும்மேலும் அதிகரிக்கச்செய்யும் என்பதை எவரும் உணருவதாகவில்லை.

யாழ்.குடாநாடே நீர்நிலைகள் வற்றிப் பாலைவனமாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதாக, அண்மைக்காலங்களில் நீர்வள, நிலவள ஆராய்ச்சியாளர்களும், அந்நிய நாட்டு நிபுணர்களும் அறிக்கைகள் சமர்ப்பித்துள்ள இக்காலகட்டத்தில், இயற்கையன்னை மனமிரங்கி அளிக்கும் மழைநீரை வீணே போகவிடலாமா?

நியாப் திட்டத்தின்கீழ் இந்த நகரத்தில் புனரமைக்கப்படும் குளங்களும் போதியபயனைத்தருமெனக் கொள்ளமுடியாது. நெல்லியடி நகர்ப்பகுதிக்கெனத் தனியான திட்டங்கள் தீட்டப்படவேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேசசெயலகம் ஆகியன துரிதமாகச் செயறபட்டு - மழைநீரைப் பாதுகாத்தல், மக்களைப் பாதுகாத்தல், நகரத்தைப் பதுகாத்தல் என்று கருமமாற்றவேண்டும். நகர்ப் பகுதிக்கு உடனடியாக வடிகால் அமைக்கும் திட்டத்தை உருவாக்கவேண்டும். வீணே போகும் மழைநீர்- வயல்களுக்கும், குளங்களுக்கும் போய்ச் சேருமாறு செய்யவேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை இவற்றுக்கு உரியமுறையில் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த



எஸ். ஜே. ஜே.

நல்ல எண்ணம் ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளத்திலும் உதயமாகவேண்டும். இத்தகைய சிந்தனையுள்ளங்கள் தோன்றும் போது, எமது மண் பாலைவனமாகவல்ல, உண்மையில் சோலை வனமாகிவிடும். நெல்லி நகரை மையமாக வைத்து இக்கட்டுரை எழுதப்பட்டாலும், யாழ்.குடாநாட்டின் நகர்ப்புறங்கள் அனைத்துக்கும் இவை சாலப்பொருந்துவனவாய் காணப்படுவது உண்மையே. இதை உணர்ந்து அனைவரும் வீழித்தெழவேண்டியது இன்றைய தலையாய கடமையாகும்.

## ஈராக்கில் பணிபுரிவதற்கு அஞ்சி

# இராணுவத்திலிருந்து விலகும் அமெரிக்கப் படை வீரர்கள்!



(வோஷிங்டன்)

ஈராக்கில் பணிபுரிவதற்கு அனுப்பப்படும் அமெரிக்க ஈராணுவத்தினர் தமது வேலையை இராஜினமார் செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் அச்சமடைந்தே அமெரிக்கப் படையினர் தமது வேலையிலிருந்து விலகிவருவதாக கூறப்படுகின்றது.

ஆனால், சம்பளம் தொடர்பான பிரச்சினைகள் காரணமாகவே இராணுவத்திலிருந்து அவர்கள் விலகவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் ஈராக்கிற்கு அனுப்பப்பட்ட 700 அமெரிக்கப் படையினரில் 300 இராணுவத்தினர் தமது பதவிகளை இராஜினமார் செய்துள்ளனர்.

அமெரிக்கா தற்போது ஈராக்கின் பாதுகாப்புப் பணிகளில் அதிக ஈடுபாடு செலுத்திவருகிறது. ஈராக்கில் தற்போது 130, 000 அமெரிக்கப் படையினர் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனால், அங்கு தொடர்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களினால் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஈராக்கில் பணிபுரிய முன்வரும் படையினருக்கு அதிக ஊதியத்தை வழங்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளது.

எனினும், இராணுவத்திலிருந்து ஆட்கள் விலகுவதால் அமெரிக்க அரசு பெரும் சிக்கல்களை எதிர்நோக்கிவருவதாக தெரியவருகிறது.

## நாடாளுமன்றம் செல்வதற்கு வைகோவுக்கு அனுமதி மறுப்பு

### பொடா நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் பொடா சட்டத் திருத்தம் குறித்த விவாதத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கக்கோரி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தாக்கல் செய்திருந்த மனுவை-பூந்தமல்லி பொடா தனி நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

மனுவைத் தள்ளுபடிசெய்த நீதிபதி ராஜேந்திரன்,

நாடாளுமன்றம் தொடர்பான விடயங்களில் முடிவெடுக்கத் தனி நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை. அதேவேளை, தனது கோரிக்கையை எந்தச் சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்தார் என்பதையும் வைகோ தெரிவிக்கவில்லை. எனவே அவரது மனுவைத் தள்ளுபடி செய்கிறேன் எனத் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கோரிக்கை தொடர்பாக வைகோ உயர் நீதிமன்றத்தை அணுகலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து, வைகோ சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போரில் தொடர்பில்லாத பொதுமக்கள் ஈராக்கில் அநியாயமாக மரணிக்கின்றனர்!

### மனிதஉரிமை அமைப்பு கவலை

போரில் எதுவித சம்பந்தமுமில்லாத ஈராக்கியர்கள் தொடர்ந்தும் மரணமடைவதாக, மனிதஉரிமை அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

ஈராக்கியப் பொதுமக்கள் எவ்வாறு மரணமடைகின்றார்கள் என்பதை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின மனிதநேய அமைப்பொன்று ஈராக்கில் மேற்கொண்டது.

இவர்களது ஆய்வின்படி, அமெரிக்கப் படையினரால் .ஏவப்படும் 'கிளஸ்டர்' குண்டுகள் விழுந்து வெடித்த பின்னர் சிதறும் துண்டுகளும் நீண்டதூரத்திற்குச் சென்று மீண்டும் வெடிப்பதனாலேயே பொதுமக்களுக்குப் பாரிய சேதங்கள் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

அத்துடன், சாதாமின் ஆதரவாளர்களைத் தேடும் அமெரிக்கப் படையினருக்கும், சதாமின் படையினருக்கும் இடையில் ஏற்படும் மோதல்களின் போதும் ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்படுவதாகவும் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சதாமின் படைகளைத் தேடியழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படையினர் நடவடிக்கைகளில் சதாமின் எந்த ஆதரவாளர்கள் சிக்காதபோதும் பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணம் - சரியான தகவல்களின்றி மேற்கொள்ளப்படும் முற்றுகைகளே என, ஆய்வினை மேற்கொண்ட மனிதநேய அமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

# உலக நோக்கு

## வழக்கை புதுவைக்கு மாற்றக்கோரும் ஜெயலலிதா மனு திங்கள் விசாரணைக்கு

சொத்துக் குவிப்பு வழக்கை பெங்களூர் நீதிமன்றத்திலிருந்து புதுவைக்கு மாற்றக்கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த மனுவை எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக இரு மாநில உறவுகளும் பாதிப்படைந்துள்ளநிலையில், பெங்களூரில் இந்த வழக்கின் விசாரணை நடந்தால் - தனக்குப் பாதுகாப்பு இருக்காது எனவும், விசாரணைகள் நியாயமான முறையில் நடப்பதற்குச் சாத்தியமில்லை எனவும் கூறிய ஜெயலலிதா, வழக்கை பாண்டிச்சேரிக்கு மாற்றவேண்டும் என்று தனது வழக்கறிஞர் வைத்தியநாதன் மூலம் மனுத் தாக்கல் செய்தார்.

இது தொடர்பாக விசாரித்த நீதிபதி வைரவா மற்றும் நீதிபதி சேமா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் - இந்த மனுவை நீதிபதி கரேயிடம் முறையிடுமாறு பரிந்துரைத்தது. இதனை அடுத்து தலைமை நீதிபதி கரேவிடம் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

கரே வழக்கின் தன்மையை ஆராயுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார். பின்னர் தலைமை நீதிபதி கரே தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட டிவிஷன் பெஞ்ச் வரும் திங்கட்கிழமை இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக நேற்று அறிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தானில் அடுத்த ஆண்டு தேர்தல் நடத்தப்படும் என அறிவிப்பு!



அடுத்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் தேர்தல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் தேர்தலுக்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒருகட்டமாக தலைநகர் காபூலுக்கு உள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கையில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை, தலிபான்களின் கோட்டையாக விளங்கிய கந்தகாருக்கு மேலதிக போர்வீரர்களும், கட்டுமான்ப்பணிகளில் ஈடுபடுபவர்களும் பெருமளவில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாணங்களில் சமாதானப்பணிகளில் ஈடுபடுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இவர்கள் எட்டாவது குழுவினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுமானக் குழுவில் உள்ளவர்களின் பணிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் போர் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது எனவும், மனித உரிமை மீறல் சம்பவங்களை கட்டுப்படுத்துவதுடன், அவர்களும் ஈடுபடாமலிருந்தல் என்பன இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பணிகளாகும்.

எனினும், ஆப்கானிஸ்தானின் வடக்கிலுள்ள தலிபான் போராளிகள் அமெரிக்கப் படையினர் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் அவுஸ்ரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 400!



இந்திய அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று அடெலெய்ட் நகரில் ஆரம்பமானது. போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 400 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ்வோ முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக ஜோடி சேர்ந்த ஜஸ்ரின் லங்கரும் மற்றும் மத்யூ ஹேய்டனும் விளையாடிக்கொண்டிருந்தபோது 22 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில், அவுஸ்ரேலிய அணி தனது முதல் விக்கெட்டை இழந்தது.

மத்யூ ஹேய்டன் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்திய அணியின் புதிய பந்துவீச்சாளர் இர்பால் பத்தான் வீசிய பந்துக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து பொண்டிங்கும், லங்கரும் விளையாடிக்கொண்டிருந்தபோது 99 ஆவது நிமிடத்தில் இணைப்பாட்டமாக 135 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் லங்கர் ஆட்டமிழந்தார். இவர் 72 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து மாட்டீன் 30 ஓட்டங்களுடனும், ஸ்ரீவ்வோ 30 ஓட்டங்களுடனும் கரிச் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

துணை அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 176 ஓட்டங்களையும், அடம் கில்கிறிஸ்ட் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் நேற்றைய ஆட்டம் நிறைவுபெற்றது.

நேற்றைய ஆட்டமுடிவில் அவுஸ்ரேலிய அணி ஐந்து விக்கெட் இழப்பிற்கு 400 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய அணி சார்பில் பந்து வீசிய அகர்கார், இர்பான் பத்தான், அனில்கும்ளே தலா ஒரு விக்கெட்டுகளையும், அசிஷ் நெஹ்ரா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்த டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக ஹர்பஜன்சிங் விளையாடவில்லை. இவர் இந்தியா திரும்பியுள்ளார். இவருக்குப் பதிலாக அணியில் அனில் கும்ளே சேர்க்கப்பட்டார்.

அத்துடன், சஹீர்கானுக்குப் பதிலாக அணியில் புதுமுகமாகச் சேர்க்கப்பட்ட இர்பான் பத்தான் தனது முதல் டெஸ்ட் விக்கெட்டை நேற்று வீழ்த்தினார். அவுஸ்ரேலிய அணியிலும் பிறட்கனுக்குப் பதிலாக வில்லியம்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

## இந்தியர் ஒருவர் ஈராக்கில் பலி!

ஈராக்கிலுள்ள அமெரிக்க கூட்டுப்படையில் கடமைபுரிந்த இந்தியாவைச் சேர்ந்த சார்ஜன் உதேசிங் டிசம்பர் 1 ஆம் திகதி பாக்தாத்தின் தென்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த நேரத்தில் மறைந்திருந்து சதாமின் ஆதரவுப் படைகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் இறுதிக்கிரிகைகள் அவரின் பிறந்த இடமான வட இந்தியாவின் சாண்டிகர் நகரில் அண்மையில் நடைபெற்றது.

சர்வதேச நாடுகளின் கருத்துக்களை அறிந்தபின்பே ஈராக்கிற்கு இந்திய இராணுவத்தினரை அனுப்ப தீர்மானிக்கமுடியும் என, இந்தியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச் சூட்டில் 7 இஸ்ரேலியர்கள் காயம்

(ஜெருசேலம்)

பலஸ்தீன மேற்குக்கரைப் பகுதியிலுள்ள நப்லுசில் பலஸ்தீன துப்பாக்கிதாரர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் 7 இஸ்ரேலியர்கள் காயமடைந்ததாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

யூதர்களின் புனித நகரான யோடெப் கல்லறைக்கு அருகில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனால் யூத மதயாத்திரிகர்கள் அப்பிரதேசத்துக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

## மருத்துவ மாணவர்களின் பகிஷ்கரிப்பு

மருத்துவபீட மாணவர்களால் நடாத்தப்பட்டுவரும் பகிஷ்கரிப்பு போராட்டம் சம்பந்தமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தெளிவின்மையை விளக்க வேண்டிய கடப்பாடு மருத்துவபீட மாணவர் ஒன்றியத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதனை நாம் இங்கு தெளிவுபடுத்துகின்றோம்.

Dr. v. குணானந்தன் அவர்கள் நரம்பியல் சத்திர சகிச்சைத்துறையிலேயே நிபுணத்துவம் பெற்றிருக்கின்றார். அதேவேளை பொது சத்திரசிகிச்சைத்துறை உள்ளிட்ட பல்வேறு சத்திர சிகிச்சைப் பிரிவுகளில் நிபுணத்துவம்பெற்ற வைத்திய நிபுணர்கள் தற்சமயம் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரிகின்றனர். இந்நிலையில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் திட்டமிடாத செயற்பாட்டினால் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரான Dr. v. குணானந்தன் அவர்கள் பொது சத்திரசிகிச்சைத்துறைக்கு நீதிமன்றத்தினால் இடைக்கால மீள்நியமனம் பெற்றுவந்துள்ளார்.

பொது சத்திர சிகிச்சை நிபுணர்கள் தாராளமாக தற்போதுள்ள நிலையில் பொது சத்திர சகிச்சை சேவையில் ஈடுபடாத Dr.V. குணானந்தன் அவர்கள் வருகை தரு பேராசிரியராக பொது சத்திர சிகிச்சைத்துறைக்கு இடைக்கால மீள்நியமனம் பெற்றிருப்பதையே சத்திரசிகிச்சை நிபுணர்கள் எதிர்த்துள்ளார்கள் என எம்மிடம் தெரிவித்துள்ளனர். அத்துடன் அவரை சுகாதார திணைக்கள நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணராக நியமிப்பதற்கு சகல வைத்திய நிபுணர்களும் வரவேற்றுள்ளதுடன் ஆவன செய்வதற்கும் உள்ளனரென தெரிவித்துள்ளனர். அண்மைக்காலத்தில் சீர்படுத்தப்பட்டு சுமுகமாக நடைபெற்று வந்த மாணவர்களிற்கு பயன்பாடுடைய சத்திர சிகிச்சை கற்கைநெறியைத் தொடர்ந்து செயற்படுத்துமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய நாம் நிர்வாகத்திற்கு வேண்டுகோள்விடுத்து பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுவருகின்றோம்

மருத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(552)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விடுதலைப் புலிகளின் திட்டவரைபு அவர்களது முழுமையான திட்டம்!

## வரவேற்கவேண்டும் என்கிறார் அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டிருக்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த திட்ட யோசனைகள் வரவேற்கவேண்டிய ஒன்றாகும். இது அவர்களது முழுமையான திட்டமாகும்.

இவ்வாறு அமெரிக்காவின் எவறெஸ்கா பல்கலைக்கழக பேராசிரியர் றொபேட்சி எபோட் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்- பொதுஜன உணர்வின்மையில் இருந்து, மீண்டும் அரசியற்தலைவர்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படுமானால் அனேகமான பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கமுடியும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிக்கு, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான எழுத்துமூலமான யோசனைகள் வரவேற்கத்தக்க செயற்பாடு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புலிகள் - அரசாங்கத்திடம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனைகள் அந்த இயக்கத்தின் முழுமையான திட்டமாகும். இது புலிகளின் முதலாவது எழுத்துமூல ஆவணமாகும். இதனடிப்படையில் கலந்துரையாடலுக்கு, அரசாங்கத்துக்கு முதல் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இருப்பினும் எடுத்த எடுப்பிலேயே தெற்கிலுள்ள பல கட்சிகள் புலிகளின் யோசனைகளை பரிசீலிக்கத்தேவையில்லை எனக் கூறியுள்ளன. ஆனால் கலந்துரையாடல்களின்றி சமாதான முறையில் தீர்வுகாணமுடியாது. இடைக்கால யோசனைகள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முக்கிய செயற்பாடாக கருதப்படுகின்றன.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் - வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவப்பாதுகாப்பு வலயங்கள் தனிபட்ட நபர்களின் காணிக்குள் இருந்து, பறிக்கப்பட்டவையாகும். உலகிலுள்ள எந்த ஒரு ஜனநாயக ஆட்சிமுறைமையும், பொதுமக்களிடமிருந்து சொத்துக்களைப் பெறுவதற்கு உரிமைகள் வழங்கப்படவில்லை. நிலப்பாவனைக்காக கடந்தகால இழப்பீடுகளை அரசாங்கம் வழங்கவேண்டிவரும். நிலத்தை வாடகைக்கு பெறுவதாயின் அதியுயர் பாதுகாப்பு வலயம் குறைவடையும். இலங்கை அரசாங்கத்தினால் படையினர் மேற்கொண்ட செலவீனத்தை ஏற்கமுடியாது போனால், ஒரு கட்டத்தில் இலங்கை அரசாங்கம் பொதுமக்களின் நிலஉரிமையை மதிக்க வேண்டிவரும் எனவும் தெரிவித்தார்.

### அமெரிக்கத் தூதுவர் திருமலை விஜயம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லூஸ் ரெட் எதிர்வரும் 17 ஆம் திகதி திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யு.எஸ்.எயிட் (U.S.AID) எனும் அரசசார்பற்ற நிறுவனத்தைத் திறந்துவைப்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான தூதுவர் பதவியை ஏற்றபின்னர் முதன்முதலாக இவர் திருமலை செல்லவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (04)

## திருமலை மாவட்டத்தில்

# தமிழர்களின் காணிகள் பறிபோகும் அபாயநிலை!

திருகோணமலை பெரியபாடு தமிழர்களின் கரையோரப்பிரதேச காணிகளில், அத்துமீறி குடியிருக்கும் சிங்களவர்களால், அந்தக் காணிகள் அவர்களுக்கே செல்லும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தநடவடிக்கையை அடுத்து, அங்கிருந்து வெளியேறிய தமிழரின் குடியிருப்புகளில் - சுமார் 175 சிங்களக் குடும்பங்கள் அத்துமீறி குடியேறி தற்போதும் வசித்து வருகின்றனர்.

காணி அமைச்சின் தற்போதைய நடவடிக்கையான, காணி இல்லாதவர்களுக்கு காணியைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் கீழ், எதிர்வரும் 22,23,24 ஆம் திகதிகளில் காணிகள் வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று கந்தளாய், மூதூர் திருமலை நகரம் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது.

தற்போது தமிழர்களின் கரையோர நிலங்களில் குடியிருக்கும் சிங்கள மக்களுக்கு அந்தக் காணிகளை வழங்குவது தொடர்பாக, நேற்றுமுன்தினம் திருமலை அரச அதிபர் காமினி றொட்றிக்கோவினால் கூட்டம் ஒன்று திருமலை கச்சேரியில் நடத்தப்பட்டது.

இதில் உரையாற்றிய அரச அதிபர், அந்தக் காணிகளைச் சிங்கள மக்களுக்கு வழங்குவது தொடர்பில் இருக்கும் சிக்கல்கள் தொடர்பாக அங்கிருந்த அரச அதிகாரிகளிடம் கேட்டபோது, அரச அதிகாரிகள் கரையோரப் பாதுகாப்புச் சபையின் அனுமதிபெறவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். இதற்கு அரச அதிபர், அவர்களின் அனுமதியைப் பெற்றால் காணிகளைச் சிங்கள மக்களுக்கு வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் காணிகளைச் சிங்கள மக்களுக்கு வழங்குவதை எதிர்த்து, தமிழ்மக்கள் முன்னர் மேற்கொண்ட ஹர்த்தால் எதிர்ப்பு நடவடிக்கையால் அது கைவிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(04,10)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தலைவர் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைதாகியுள்ளார்!

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர்மீது மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய கட்டடத் தொகுதியில், குடிவரவுப் பகுதியை அமைப்பதில் 23 லட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பது இவர் மீது சுமத்தப்பட்டுள்ள முதல் குற்றச்சாட்டாகும்.

விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகள் நன்மைக்காக, அமைக்கப்பட்ட நிலையத்துக்கு 39 லட்ச ரூபா செலவிடப்பட்டது. ஆனால், ஆணைக்குழுவின் மதிப்பீட்டின்படி 12 லட்ச ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டது.

கேள்விப்பத்திரங்கள் கோராமலும் சபைப் பணிப்பாளர் அங்கீகாரம் இல்லாதும் சுசந்த பெர்ணாண்டோ ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை வீட்டுப் பணிப்பெண் ஜோர்தானில் குத்திக்கொலை!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஜோர்தானுக்கு வீட்டுப்பணிக்காகச் சென்ற பெண் ஒருவர் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாதம், இரண்டாம் திகதி இந்தச் சம்பவம் நடைபெற்றது. சுமார் 40 வயது மதிக்கத்தக்க இவர் வெளிநாட்டு நபர்களால் சுமார் 1[illegible] தடவைகள் குத்தப்பட்டுள்ளார் என ஜோர்தானியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பாக ஒரு பெண் உட்பட நான்கு வெளிநாட்டவரைக் கைது செய்துள்ளதாகவும், நிதித்தகராறுடன், தனிப்பட்ட பிரச்சினையுமே இந்தக் கொலைக்கு காரணமென ஜோர்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பெண்ணின் பெயர் அடங்கிய விபரங்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை.

## நீதி ஒதுக்கீட்டு விவாதத்தில் நாடாளுமன்றில் அமளிதுமளி

இந்துசமய கலாசார அமைச்சுக்கான வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு அமைச்சர் டபிள்யூ.ஜே. லொக்குபண்டார முன்வந்தபோது அமளிதுமளி ஏற்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரட்ணாயக்க எழுப்பிய சிறப்புரிமைப் பிரச்சினை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையின்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட யோசனைகளுக்கு அனுமதி வழங்காமல் அது தொடர்பாக கேள்வியை எழுப்பும் வகையில் அமைச்சர் லொக்கு பண்டாரவுக்கு அனுமதி வழங்கமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரட்ணாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருட்டுப்போன மோட்டார்சைக்கிள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது

அம்பாறை அக்கரைப்பற்றில் வயலுக்குச் சென்றுகொண்ருந்த முஸ்லிம் ஒருவரின் மோட்டார் சைக்கிளைத் திருடியவரை, விடுதலைப் புலிகள் கைதுசெய்து அவரிடமிருந்து மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் காலை தனது வயலுக்கு சென்ற ஆதம்பாவா அல்லா பிச்சை என்பவரை அக்கரைப்பற்றிலுள்ள நாற்பதாம் கட்டைப்பகுதியில் இனம் தெரியாத இளைஞர் ஒருவர் வழிமறித்து அவரது மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக அக்கரைப்பற்றிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் முறையிடப்பட்டதை அடுத்து, சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய விடுதலைப்புலிகள் திருடியவரைப் பிடித்ததுடன் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளையும் திருடிய நபரையும் அக்கரைப்பற்றிலுள்ள போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் இன்று ஒப்படைக்க வுள்ளதாக அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். (7)

# பத்திரிகையாளருக்கு பயிற்சிகள் வழங்க நோர்வே, சுவீடன், 2.5 மில்லியன் ஒதுக்கீடு

## ஒப்பந்தம் கைச்சாத்தானது

இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான பயிற்சியினை நடாத்த நோர்வேயும், சுவீடனும் முனவந்துள்ளன. இதற்கென 2.4மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அவை ஒதுக்கியுள்ளன.

இந்த மாதம் எட்டாம் திகதி இதற்கான ஒப்பந்தம் இலங்கைப் பத்திரிகை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் பத்திரிகையாளர்களுக்கான கல்லூரி ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் பத்திரிகையாளருக்கு பயிற்சிகளை வழங்கி அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதுடன், பத்திரிகையாளருக்கும், பொதுமக்களுக்குமிடையில் உறவைப்பேணும் வகையில் முறைப்பாட்டுக்குழு ஒன்று அமைப்[illegible]தெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் நிறுவனம் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிபுரிவதுடன், பத்திரிகையாளருக்கான கல்விச்செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்தவுள்ளது.

# பாதுகாப்பு அமைச்சு அவசியமானால்...

இதனால் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சு தடைப்பட்டிருந்தன.

இந்நிலையில் அரசு மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள அதிகாரங்கள் அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதனையும் ஜனாதிபதி வழங்குவார்.வேறு ஒருவரிடம் ஒப்படைக்க ஜனாதிபதிக்கு அரசியல் சாசனத்தில் அனுமதி வழங்கப்படவில்லை.

இருப்பினும் பாதுகாப்பு அமைச்சுக்கள் இன்றி சமாதானப் பேச்சினை முன்னெடுத்துச் செல்லமுடியாது என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியானால் அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். நிறைவேற்று அதிகாரமும அரசியல் சாசன அதிகாரமும் இரண்டு பிரதான கட்சிகளிடம் இருப்பதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது வழமை. இவற்றைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். என்று சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்

(01)

# வவுனியாவில் மூன்று சகோதரர் படுகொலை...

விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டபோது, க. புலேந்திரராசா (5 பிள்ளைகளின் தந்தை) தனது மனைவியான சிவயோகராணியையும் அழைத்துச் சென்றுள்ளார்

இவ்வாறு படையினரால் முகாமிற்கு அருகில் அழைத்துச்செல்லப்பட்ட இவர்களை, ஒருவர் பின் ஒருவராக வெட்டிக்கொலை செய்ததுடன் சிவயோகராணியையும் கழுத்தின் பின்புறம், கைபோன்ற இடங்களிலும் வெட்டியதில் அவர் மயங்கி விழுந்ததுடன், அவர் இறந்துவிட்டாரென நினைத்து படையினர் சென்றுவிட்டனர். இதன் பின்னர் சிவயோகராணி கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த படைச்சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

21 பக்க அறிக்கைகொண்ட நீதிபதியின் தீர்ப்பில் குறித்த முதலாம் எதிரி, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு இடத்தில் நிறுத்தி கழுத்தில் சுருக்கிட்டு மரணதண்டணை விதிக்கப்படவேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பினையடுத்து படைச்சிப்பாய் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அநுராதபுரத்திலுள்ள போகம்பரைச் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த சம்பவத்தில் இரண்டாம் எதிரியான படைச்சிப்பாய் அநுராதபுரத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இறந்து விட்டார். மூன்றாம் எதிரி சம்பவம் நடைபெற்ற வேளை முகமூடி அணிந்திருந்தமையால் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (03)

GLOBAL VILLAGE
COMPUTER EDUCATION
@ CCS
302/1, Navalar Road, Anaipanthy, Jaffna.
Visual Basic
MS Office XP
Java - C++
Wep Page designing
{HTML, DHTML, Java Script Front Page}
Desk Top Publishing
PageMaker 7, CorelDraw 11, Photoshop 7
தமிழ் நாட்டில் மட்டும் 142 கிளைகளுடன் இயங்கும் Global Village இன் இந்திய சான்றிதழ்களும் பயிற்சிநெறிக்கான இலவச நூல்களும் வழங்கப்படும். புதிய பிரிவுகள் ஆரம்பம் - 15.12.2003 & 03.01.2004
O/L எடுத்த மாணவர்களிற்கான விசேட பிரிவுகள்
ஆரம்பம்: 15.12.2003 மு.ப. 11.00 & பி.ப 4.00 3 மாதம்
"வரையறுக்கப்பட்ட அனுமதிகளை விரைவில் பெற்றுக்கொள்ளுங்கள்"
(சி-1884)

மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல: 1572 திகதி: 12.12.2003
வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| F | 9 | 7 | 3 | 3 | 2 | 6 |

நந்தா கந்தசாமியின்
புதிய வெளி New/Space
Computer Art Exibition
நாவலர் கலாசார மண்டபத்தில்
இன்றும் நாளையும் காலை 10.00 தொடக்கம் மாலை 8.00 வரை
553

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.